# பள்ளிக்கல்வி ஆணையரகம், சென்னை-6

## பத்திரிகைச் செய்தி

2020-2021 முதல் 2022 -2023 முடிய உள்ள அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 2849 முதுகலை ஆசிரியர்/உடற்கல்வி இயக்குநர் நிலை-1/ கணினி பயிற்றுநர் நிலை-1 காலிப்பணியிடங்களை நிரப்பிட பணிநாடுநர்கள் தெரிவு செய்து அளித்திட கேட்டுக்கொள்ளப்பட்டதையடுத்து ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் போட்டித்தேர்வு நடத்தப்பட்டு தாவரவியல், விலங்கியல், அரசியல் அறிவியல்,வரலாறு, புவியியல், மனையியல், கணினி பயிற்றுநர் நிலை-1, உடற்கல்வி இயக்குநர் நிலை-1 ஆகிய பாடங்களுக்கு பணி நாடுநர்கள் தெரிவுப்பட்டியல் (Selection List) பெறப்பட்டுள்ளது. இப்பணிநாடுநர்களுக்கு நேரடி நியமன கலந்தாய்வு 14.10.2022 வெள்ளிக்கிழமை சென்னையில் கீழ்க்காணுமாறு நடைபெற உள்ளது

| வ.எண். | கலந்தாய்வு நடைபெறும் மையத்தின் விவரம் | பங்குபெற வேண்டிய பணிநாடுநர்கள் (பாட வாரியாக) |
|---|---|---|
| 1 | மாகாண (Presidency) மகளிர் மேல்நிலைப்பள்ளி எழும்பூர், சென்னை-8 | அரசியல் அறிவியல்,வரலாறு, புவியியல், மனையியல், கணினி பயிற்றுநர் நிலை-1, உடற்கல்வி இயக்குநர் நிலை-1 |
| 2 | எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக்கட்டடம், முதல் தளம், டி.பி.ஐ. வளாகம், சென்னை-6 | தாவரவியல், விலங்கியல் |

. 13.10.2022 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய (trb.tn.nic.in) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள மேற்கண்ட பாடங்களுக்கு தற்காலிகமாகத் தெரிவு

செய்யப்பட்ட (Provisional selection list) பட்டியலில் இடம் பெற்றுள்ள பணிநாடுநர்கள், தங்களின் சான்றிதழ் சரிபார்ப்புக்கு அழைக்கப்பட்ட கடிதம் (CV Call letter), Provisional selection letter மற்றும் அனைத்துக் கல்விச் சான்றிதழ்களின் நகல்களுடன் காலை 9.00 மணிக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

13.10.22

ஆணையர், பள்ளிக்கல்வி

நாள் 13.10.2022

13/10/2022